[18th August 1961

THE HON. SRI V. RAMAIAH : திருவண்ணாமலை—சாத்தனூர் பாதையில் இன்னும் அதிகமான பஸ்களை விட வேண்டும் என்று ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதிகாரி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக ஞாயிற்றுக்கிழமை போன்ற விடுமுறை நாட்களில் அதிகமான அளவில் பிரயாணிகள் அங்கு போய் கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்களில் இப்போது இருப்பதை விட கூடுதலாக எக்ஸ்ட்ரா டிரிப் விடுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

SRI V. SUBBIAH : ஸார், கிராமங்களில் அதிகமான பஸ்களை விடுவதற்கு ஏதாவது திட்டமிருக்கின்றதா ? அப்படியானால் எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனை பஸ்கள் விடப்படும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

Marketing Committees (paddy)

* 1230 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவில் விளையும் நெல், நிலக்கடலை போன்ற தானியங்களின் விற்பனையை விவசாய விலைபொருள் விற்பனைச் சட்டத்திற்கு உட்படுத்தி, மார்க்கெட்டிங் கமிட்டிகள் ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

Tamil Script

* 1231 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to reform the Tamil script.

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to popularise Tamil through the Roman script?

THE HON. SRI C. SUBRAMANIAM : This does not arise out of the main question.

Food Zones

* 1232 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to abolish food zones?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

18th August 1961]

SRI N. K. PALANISAMI : இந்த உணவு மண்டலம் தொடர்ந்து இருந்தும் உணவுப் பொருள்களின் விலை குறைய வில்லை. ஆகவே இந்த உணவு மண்டலத்தை எடுத்துவிடுவதைப் பற்றி மத்திய சர்க்காரோடு இந்தச் சர்க்கார் விவாதித்ததா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஏற் பாட்டைப் பொறுத்தமட்டில் இந்த மண்டலத்தை இப்போது எடுத்துவிடுவதாக இல்லை. இதனால் உணவு விலை குறையவில்லை என்று சொல்ல முடியாது. நிலைமை மாறினால் இதை எடுத்து விடுவது பற்றி யோசிக்கப்படும்.

SRI M. KALYANASUNDARAM : ஸார், உணவு மண்டலம் தொடர்ந்து நீடிப்பதால் நம்முடைய ராஜ்யத்திற்கு என்னென்ன அனுகூலம் கிடைக்கும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கருது கிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போதுள்ள உணவு மண்டலம் இல்லையென்றால் ஆந்திர அரிசி வெளியே போகக் கூடும். இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த மண்டலம் இருப்பதால் இது போன்ற பல அனுகூலங்கள் இருக் கின்றன.

Automobile workers (demands)

* 1233 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மோட்டார் தொழிலாளிகளின் கோரிக்கை விஷயமாக சமீபத்தில் ஹைகோர்ட்டில் கொடுத்த தீர்ப்பை அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(இ) இதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

( ) As a result of the discussions held by the Assistant Commissioner of Labour with the parties, the matter has been amicably settled on 10th **March 1961**.

Sluice (Chinnar)

* 1234 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா பெரம்பலூர் தாலுக்காவில் வடக்கலூர் அக்கிரகாரம் கிராம ஏரிக்கு சின்னாற்றிலிருந்து மொட்டணைக் கட்டித் தண்ணீர் கொடுக்கும் உத்தேசமுண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?